பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

14 05 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை வெளிப்படுத்தியுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
- உச்சநீதிமன்றத்தின் 52-ஆவது தலைமை நீதிபதியாக **Bushan Ramkrishna Gavai** இன்று பதவியேற்றுக்கொண்டார்.
- கடந்த மாதம் 23-ஆம் தேதி பஞ்சாபில் சர்வதேச எல்லையை தவறுதலாக கடந்து சென்ற எல்லை பாதுகாப்புப்படை வீரர் **Purnam Kumar Shaw** –வை பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் இன்று இந்தியாவிடம் ஒப்படைத்தனர்.
- தமிழகத்தில் 10 மற்றும் 11-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நாளை மறுநாள் வெளியிடப்படும் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.
- தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆகர்ஷி காஷ்யப், **Unnati Hooda** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**<<<<<<<>>>>>**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை முப்படைகளின் தளபதிகள் இன்று காலை, குடியரசுத் தலைவர் மாளிகையில் சந்தித்து பேசினர்.

முப்படைகளின் தளபதி திரு அனில் சௌகான், ராணுவ தளபதி திரு உபேந்திர துவிவேதி, விமானப்படை தளபதி திரு ஏ பி சிங், கடற்படை தளபதி திரு தினேஷ் கே திரிபாதி ஆகியோர் குடியரசுத் தலைவரை சந்தித்து பேசினர்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை வெற்றிகரமாக நடத்தி முடித்த பின்னர், முப்படையினர், குடியரசுத் தலைவரை சந்தித்து பேசுவது முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த சந்திப்புக்குபின், குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் முப்படையினரும் அர்ப்பணிப்பு உணர்வோடு, மன வலிமையுடன் ராணுவ நடவடிக்கை மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாதத்துக்கு எதிராக இந்தியாவின் நிலைப்பாட்டை தெரிவிக்கும் வகையில் ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை அமைந்திருந்ததாக குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

**<<<<<<<>>>>>**

உச்சநீதிமன்றத்தின் 52-ஆவது தலைமை நீதிபதியாக திரு **Bushan Ramkrishna Gavai** பதவியேற்றுக்கொண்டார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்துவைத்தார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள், உச்சநீதிமன்ற நீதிபதிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

**<<<<<<<>>>>>**

மத்திய அரசு பணிகள் ஆணையம் **UPSC**-ன் தலைவராக டாக்டர் அஜய்குமாரை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நியமித்துள்ளார்.

**UPSC**-விதிமுறைகளின்படி அவரது பதவிக்காலம் நிர்ணயிக்கப்படும் என்றும், பணியில் சேர்ந்த நாளிலிருந்து அவரது பதவிக்காலம் தொடங்கும் என்றும் குடியரசுத் தலைவர் பிறப்பித்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<<>>>>>**

கனடாவின் வெளியுறவுத்துறை அமைச்சராக இந்திய வம்சாவளியை சேர்ந்த அனிதா ஆனந்தை, அந்நாட்டு பிரதமர் திரு மார்க் கார்னி நியமித்துள்ளார்.

புதிதாக கனடாவின் வெளியுறவு அமைச்சராக பொறுப்பேற்றுள்ள அனிதா ஆனந்துக்கு, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கனடா அமைச்சரவையில் இந்திய வம்சாவளியை சேர்ந்த மனீந்தர் சித்தும் சர்வதேச வர்த்தக அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பணவீக்கத்தை குறைக்க முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் மால்வியா தெரிவித்துள்ளார்.

கடந்த 2014-ஆம் ஆண்டுக்கு முன்னர் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் இரட்டை இலக்கமாக இருந்த பணவீக்கம், தேசிய ஜனநாயக கூட்டணி பதவியேற்றபின், எட்டு சதவீதமாக கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று அவர் கூறியுள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கையின் பயனாக 2024-25-ல் பணவீக்கம் நான்கு புள்ளி ஆறு சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

நாட்டை பாதுகாக்கும் பணியில் அதிக அளவில் இளைஞர்களை ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

நாட்டு நலப்பணி மாணவர்களிடையே காணொலி வாயிலாக பேசிய அவர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கலாச்சார பரிவர்த்தனை போன்றவற்றில் இளைஞர்களின் பங்களிப்பு முக்கியமானது என்று குறிப்பிட்டார்.

உலக அளவில் மாறிவரும் சவால்களுக்கு ஏற்ப நாட்டு நலப்பணி மாணவர்கள் தங்களை தயார்படுத்திக்கொண்டு தன்னலமற்ற சேவையை வழங்க வேண்டும் என்றும் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

மத்திய அரசின் திட்டப் பணிகள் மூலம் மக்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் நிதி சேவைகளை மேலும் வலுப்படுத்துமாறு மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

வங்கி சேவை வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்து புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், ஜன்தன் திட்டம், அடல் ஓய்வூதியத்

திட்டம், பிரதமரின் சூரியசக்தி மின்திட்டம், சாலையோர வியாபாரிகளுக்கான ஸ்வநிதி போன்ற திட்டப் பயனாளிகளுக்கு வங்கிகளில் சிறந்த சேவையை வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

மத்திய அரசின் நிதிச் சேவைகள் துறை செயலாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

**<<<<<<<>>>>>**

பஞ்சாப் மாநிலத்தின் **Ferozepur** வனப்பகுதியில் கடந்த மாதம் 23-ஆம் தேதி பணியில் ஈடுபட்டிருந்த எல்லை பாதுகாப்புப்படை வீரர் **Purnam Kumar Shaw** தவறுதலாக சர்வதேச எல்லையை கடந்தபோது, பாகிஸ்தான் வனத்துறையினர் அவரை சிறைபிடித்தனர்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பிறகு நடத்தப்பட்ட இருநாட்டு ராணுவ பேச்சுவார்த்தைக்கு பின்னர், இன்று காலை அடாரி எல்லைப்பகுதியில் பாதுகாப்பாக இந்திய ராணுவ அதிகாரிகளிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார்.

எல்லை பாதுகாப்புப்படை வீரர் **Purnam Kumar Shaw** எல்லைப்பகுதியில் உள்ள விவசாயிகளை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

**<<<<<<<>>>>>**

தமிழகத்தில் 10 மற்றும் 11-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நாளை மறுநாள் வெளியிடப்படும் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் நாளை மறுநாள் காலை 9 மணிக்கும், 11-ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் பிற்பகல் 2 மணிக்கும் வெளியிடப்படும் என்றும் அது தெரிவித்துள்ளது.

தேர்வு முடிவுகளை **'tnresults.nic.in** என்ற இணையதளம் மூலமாக தெரிந்துகொள்ளலாம்.

மாணவர்களுக்கு குறுஞ்செய்தி மூலமாகவும் தேர்வு முடிவுகள் தெரிவிக்கப்படும் என்றும் அரசு தேர்வுகள் இயக்ககம் கூறியுள்ளது.

**<<<<<<<>>>>>**

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மருத்துவமனைக்கு தேவையான கூடுதல் வசதிகள் செய்துதரப்படும் என்று தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - ஸ்டாலின் - 40 செகண்ட்ஸ்)*

**<<<<<<<>>>>>**

அருணாச்சலப்பிரதேசத்தில் உள்ள சில இடங்களுக்கு சீனா தொடர்ந்து புதிய பெயர் சூட்டிவருவதற்கு இந்தியா தமது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், இதுபோன்ற நடவடிக்கைகளை சீனா மேற்கொள்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறினார்.

இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியில் உள்ள இடங்களுக்கு சீனா பெயர் சூட்டுவதற்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை என்றும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் உறுதிபட தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>**

பஞ்சாபில் விஷச்சாராயம் அருந்தி உயிரிழந்தோர் எண்ணிக்கை 23-ஆக அதிகரித்துள்ளது. மேலும் 13 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுதொடர்பாக, செய்தியாளர்களிடம் பேசிய அமிர்தசரஸ் அரசு மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி டாக்டர் கிரண்தீப், விஷம் கலந்த சாராயம் புழக்கத்தில் இருந்த ஏழு கிராமங்களில் காவல்துறை மற்றும் மருத்துவக்குழுவினர் ஆய்வு செய்து வருவதாகவும், உடல்நலன் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து உடனடியாக அவர்களுக்கு சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>**

தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆகர்ஷி காஷ்யப், **Unnati Hooda** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் ஆகர்ஷி காஷ்யப், 21-16, 20-22, 22-20 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Kaoru Sugiyama** –வை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் **Unnati Hooda** 21-14, 18-21, 23-21 என்ற செட் கணக்கில், என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **Thamonwan** –ஐ வென்றார்.

<<<<<<<>>>>>

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப்போட்டியில், 47 தங்கம், 39 வெள்ளி உள்ளிட்ட 122 பதக்கங்களுடன் மகாராஷ்ட்ரா முதலிடத்திலும், 19 தங்கம், 9 வெள்ளி உள்ளிட்ட 42 பதக்கங்களுடன் ராஜஸ்தான் இரணடாவது இடத்திலும், ஹரியானா மூன்றாவது இடத்திலும் உள்ளது.

கடந்த நான்காம் தேதி தொடங்கிய இப்போட்டி, நாளையுடன் நிறைவடைகிறது.

<<<<<<<>>>>>